மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிவுற்றதற்குப் பின்னர் எஞ்சியுள்ள கேள்விகள் உடுக்குறியிடா வினாக்களாகக் கருதப்பட்டு அதற்குரிய பதில்கள் உடுக்குறியிடா வினாக்களோடு சேர்த்து வழங்கப்படும். அதுதான் விதி.

(ஆ) மின் கட்டண உயர்வு குறித்து அவையில் அறிவிக்காமல் வெளியே அறிவிக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முக்கிய முடிவுகள் பொதுவாக அவையிலே அறிவிக்கப்படுவதுதான் முறை. அங்ஙனமிருக்க, மின்சாரக் கட்டண உயர்வு வெளியிலே அறிவிக்கப்பட்டு, அது பத்திரிகைகளிலேயெல்லாம் வந்த பிறகுதான் எங்களுக்குத் தெரிகின்றன. சாதாரணமாக, சட்டமன்றம் கூடுகின்ற அறிவிப்பை வெளியிட்டவுடனேயே அரசு எடுக்கிற முக்கிய முடிவுகளையெல்லாம், சட்டமன்றத்திலே தான் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முக்கிய முடிவுகள் என்று வராது; சில கொள்கை முடிவுகள் என்று இருக்கிறது. அதுகூட ஒரு மரபுதான். அது நீங்கள் அறியாதது அல்ல. ஆகவே, வேறு ஒன்றும் அதிலே வராது. அதிலே உங்களுடைய கருத்துக்களைச் சொல்லி விட்டீர்கள். அவ்வளவுதான். இது கொள்கை முடிவா, முக்கிய முடிவா என்பதெல்லாம் நிலைமையைப் பொறுத்து இருக்கிறது. நீங்கள் பேசும்பொழுது பேசலாம். (குறுக்கீடு) உங்களுடைய கருத்தைச் சொல்லி விட்டீர்கள். அதோடு முடிந்து விடுகிறது.

திரு. ச. இராமச்சந்திரன்: இந்த மாதிரியான முடிவுகளை பத்திரிகைகளிலே அறிவிப்பது மன்றத்தினுடைய மரபை மீறி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு உரிய முறைப்படி நீங்கள் எழுப்புங்கள். (குறுக்கீடு) உங்களுடைய கருத்தைச் சொல்லி விட்டீர்கள். அதற்கு மீறி எதாவது சொல்ல வேண்டுமென்றால் உரிமைப் பிரச்சினை மாதிரி, அதை முறைப்படி எழுப்ப வேண்டும். திடீரென்று எழுந்தீர்கள், உங்களுடைய கருத்தைச் சொல்லி இருக்கிறீர்கள். அதற்குப் பிறகு என்னிடத்தில் இருந்தோ அல்லது அரசாங்கத்திடம் இருந்தோ முறையான பதிலை நீங்கள் எதிர்பார்த்தால், நீங்கள் அந்த முறைப்படி

கொடுத்தால் நான் அதை எடுத்துக் கொள்ளலாம். எடுத்துக் கொண்டு, உங்களுக்குப் பதில் வழங்கலாம்.

திரு. ச. இராமச்சந்திரன் : மரபைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்லது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்குத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்துள்ளன.

(1) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளில் இருந்து, 24—1—1994 வரை ஆகும்.

(2) தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளில் இருந்து மூன்று ஆண்டுகள் ஆகும்.

வேட்பாளர்கள் நியமனத் தாட்களை 4—2—1992 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர், செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாட்கள் 5—2—1992 புதன்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 6—2—1992 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 7—2—1992 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும், பிற்பகல் 1 மணிக்கும்